**அறிவாற்றல் கருமையத்தின் அடிப்படையாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டம் (ரீஎஸ்ஈபி) – மத்திய மட்டம் - 2013**

---

அறிவாற்றல் கருமையத்தின் அடிப்படையாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டம் (ரீஎஸ்ஈபி) – மத்திய மட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் திரட்டிய நிதி முகாமைத்துவ அறிக்கைகள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 5037 எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் 2 ஆம் பிரிவின் பீ.3 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து. எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சு (எம்ஓஇ) மற்றும் மாகாண மட்டத்தில் மாகாண சபைகள் என்பன மூலம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளைக் கொண்டுள்ளது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன.

---

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் படி, அறிவாற்றல் கருமையத்தின் அடிப்படையாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டமானது நாட்டன் பொதுக் கல்வித் துறை முகம் கொடுக்கும் சவால்களை எதிர்த்து கல்வித்துறை அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் (ஈஎஸ்டிஎவ்பி) 2012 – 2016 ஐ அமுலாக்குவதற்கு நிதி உதவி வழங்குவதற்கு அமுலாக்கப்பட்டுள்ளன. மத்திய மட்டத்தில் கல்வித்துறை அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் கல்வி அமைச்சாகும். இலங்கையின் அறிவாற்றல் அடிப்படை பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் நுழைவு மற்றும் தரத்தினை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 11,000 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 64.1 மில்லியனாகும். (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) மற்ற நிதிகளில் 70 – 80 சதவீதம் மாகாண கல்வி அதிகாரிகளிற்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி கல்வி அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2012 ஒக்தோபர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 திரண்ட முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

கல்வி அமைச்சு (எம்ஓஈ) பரீட்சைகள் திணைக்களம் (டிஓஈ) மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (டிஓஈபி) என்பவற்றின் ஒதுக்கீட்டின் தொகுப்பில் உள்ள இந்த திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத திரண்ட முகாமைத்துவ அறிக்கைகளைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட உரிய நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளை தெரிவு செய்து மற்றும் பிரயோகிப்பதன் மூலம் போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கு ஏற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் ஆகியோரின் நிதிகளிலிருந்தான துறையின் மூன்று மத்திய நிறுவனங்களின் செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும அடிப்படையில காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கைகள் நிதிப் பிரமாணம் (எவ்ஆர்) 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2012 நவம்பர் 26 ஆந் திகதிய 227/2012 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றுக்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரம்பல்கள் என்பன கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் தினத்தில் உள்ளவாறான

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டனவா என்பதும்

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைச் திருத்துவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பகும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சு சம்பந்தமான 2012 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்திற்கான முதலாவது பட்டோலையின் 126 ஆம் இலக்க ஒதுக்கீட்டுக் கணக்குத் தலைப்பு இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறசேரியின் 2012 நவம்பர் 26 ஆந் திகதிய 227/2012 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட திரண்ட நிதி முகாமைத்துவ அறிகைை திறைசேரி கணனி அச்சீட்டுத்தாள்கள் மற்றும் வருடாந்த மதிப்பீடு மற்றும் கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளுடன் இணங்கியிருந்தது என்னும்,

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிச் செயலாற்றல்

திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கைகள் மற்றும் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட தகவல்களின் படி, சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 241,852,176 தொகையான பெறுகைகள் உள்ளடங்கலாக சகல மூலகங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகளில் கல்வித் துறைக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 38,336,126,328 கூட்டு மொத்தத் தொகையான செலவினம் ஏற்பட்டிருந்தது. கல்வி அமைச்சு (எம்ஓஈ), பரீட்சைகள் திணைக்களம் (டிஓஈ) மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (டிஓஈபி) என்பவற்றின் 2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் வழங்கப்பட்டவாறு சகல நிதி மூலகங்களிலிருந்தும் ஏற்பட்ட செலவினம் மற்றும் மீளாய்வாண்டின் போது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திலிருந்து பெறப்பட்ட கடன் பெறுகைகளிலிருந்து ஏற்பட்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| விபரம் | மீளாய்வாண்டின் போது சகல நிதி மூலகங்களிலிருந்தும் ஏற்பட்ட செலவினம் | கடன் பெறுகைகளில் மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட செலவினம் | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டெழும் செலவினம் | | | |
| ஆளணி வேதனங்கள் | 20,009,975,311 | - | 20,009,975,311 |
| ஏனையவை | 10,683,336,542 | 93,845,626 | 10,777,182,168 |
| மூலதனச் செலவினம் | 7,642,814,475 | 148,006,550 | 7,790,821,025 |
| | 38,336,126,328 | 241,852,176 | 38,577,978,504 |

### 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி மீளாய்வாண்டின் போது இலங்கை மத்திய வங்கியில் செயற்திட்டத்திற்காக பேணப்பட்ட 5695 ஆம் இலக்க கட்டு நிதி நிதியக் கணக்குகள் செயற்பாடுகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| | ஐ.அ. டொலர் | ரூபா |
|---|---|---|
| ஆரம்ப வைப்பு | இல்லை | இல்லை |
| கூட்டு : மீள் நிரம்பல்கள் | 4,875,000 | 631,368,337 |
| கழி : பற்றுதல்கள் | 4,875,000 | 626,684,325 |
| வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | | 4,684,012 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

2012 யூலை 12 ஆந் திகதிய சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் கடன்கள் மற்றும் மானியங்களிற்கான பொது நிபந்தனைக் கூற்றின் 4.09 ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திட்டம் தொடர்புபட்ட செயற்பாடுகள், வளங்கள் மற்றும் செலவினங்கள் என்பவற்றினை போதியளவு வெளிப்படுத்தும் வகையில் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களிற்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சகல நிதி மூலகங்களிலிருந்து கல்வித் துறைக்காக கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றால் ஏற்பட்ட ரூபா 38,336,126,328 கூட்டு மொத்தத் தொகையான மொத்தச் செலவினத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 நிதிகளின் பயன்பாடு

கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவலின் படி, மீளாய்வாண்டின் போதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்ட நிதிகளின் பயன்பாடு கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | கல்வி அமைச்சின் வருடாந்த பாதீடுகளில் கடன் பெறுகைகளிற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடு | ஆண்டின் போது பங்களிப்புச் செய்யப்பட்ட கடன் பெறுகைகள் | | செய்யப்பட்ட ஒதுக்கீட்டில் செலவழித்த தொகை | சதவீதமாக பயன்பாடு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா | ரூபா | % |
| 2012 | 285,000,000 | 1,800,000 | 232,455,060 | 196,500,698 | 69 |
| 2013 | 265,596,947 | 4,515,000 | 626,684,325 | 241,852,176 | 91 |
| | **550,596,947** | **6,315,000** | **859,139,385** | **438,352,874** | **51** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு ரூபா 626.68 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்த அதே நேரம் மீளாய்வாண்டின் போது கல்வி அமைச்சின் வருடாந்த பாதீடுகளில் ரூபா 265.59 மில்லியன் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 241.85 மில்லியன் மாத்திரமே மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆதலால், கடன் பெறுகைகளின் வினைத்திறனான கண்காணிப்பிற்காக கல்வி அமைச்சால் வருடாந்த நிதித்திட்டத்தின் ஊடாகவும் முறையான பொறிமுறையொன்று அமுலாக்கப் பட்டிருக்காததனாலும் கடன் பெறுகைகளின் குறித்த பயன்பாட்டு நோக்கம் இனங்காணப்பட்டிருக்கவில்லை என்பதை குறிக்கின்றது.

(ஆ) கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவலின் படி, கல்வி அமைச்சு, டிஓஈ, எஓஈபி மற்றும் தேசிய கல்வி நிறுவகம் (என்ஐஈ) என்பவற்கு ரூபா 26 மில்லியன் தொகையான கடன் பெறுகைகளை பங்கீடு செய்திருந்தது. எவ்வாறாயினும், கடன் பெறுகைகளின் வினைத்திறனான பயன்பாட்டிற்கு உரிய நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட்ட நிதிகள்,

பயன்படுத்தப்பட்ட நிதிகள் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் செலவழிக்காது இருந்த மீதிகள் என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| நிறுவனத்தின் பெயர் | பெறப்பட்ட நிதிகள் | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | செலவழிக்காதிருந்த மீதிகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| டிஓஈ | 10,000,000 | 2,904,272 | 7,095,728 |
| டிஓஈபி | 6,000,000 | 2,313,362 | 3,686,638 |
| என்ஜஈ | 10,000,000 | 5,848,749 | 4,151,251 |
| | 26,000,000 | 11,066,383 | 14,933,617 |

## 5.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது மஹிந்தோதய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 17 பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட ஆய்வுகூடங்களின் பயன்பாட்டிற்காக ரூபா 10.29 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கட்டிட நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்க முன்னர் அத்தகைய கொள்வனவுகள் செய்யப்பட்டதாக பயன்படுத்தப்படாமலோ அல்லது குறைபாட்டுடனோ இருந்தது. கீழே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுலாக்கலிற்காக பொறுப்புடைய உத்தியோகத்தர்களிற்கு இடையில் முறையான ஒருங்கிணைப்பு இல்லாதிருந்தமை தெளிவாகின்றது.

(i) ஆய்வுகூட கட்டிட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத போதிலும் ரூபா 605,216 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் தங்காலை மகளிர் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) வீரகெட்டியாவில் ராஜபக்ஷ தேசிய பாடசாலை, மொனறாகலையில் மஹானாம மத்திய கல்லூரி மற்றும் காலியில் மல்ஹாரூஸ் சுல்தியா மத்திய கல்லூரி என்பவற்றின் ஆய்வுகூட கட்டிட நிர்மாண வேலைகளின் முன்னேற்றம் 2014 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு 60 சதவீதத்திற்கு குறைவாக இருந்த போதிலும் அத்தகைய பாடசாலைகளிற்கு ரூபா 2.42 மில்லியன் பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மேலும், 107 சந்தர்ப்பங்களில் உடன்பட்டவாறு, உரிய பாடசாலைகளிற்கு ரூபா 16.23 மில்லியன் பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ஒப்பந்தக்காரர்கள் தவறியிருந்தார்கள் என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், உரிய ஒப்பந்தக்காரர்களுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளை ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கோ அல்லது இடைநிறுத்துவதற்கோ அல்லது திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மஹிந்தோதய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 12 பாடசாலைகளில் ஆய்வுகூட கட்டிட நிர்மாணிப்பு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 24 சதவீதம் முதல் 53 சதவீதம் வரையான மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. எவ்வாறாயினும், உரிய காணியின் சட்ட உரித்துடைமையை பெறுவதில் எழுகின்ற பிரச்சனைகள்

காரணமாக தங்காலை மகளிர் கல்லூரியில் ஆய்வுகூடக் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் படி, பாடசாலை அடிப்படை கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட 50 தேசிய பாடசாலைகளுக்கும் 359 இரண்டாம் நிலை மாகாண பாடசாலைகளுக்கும் 2012 இல் ரூபா 162.5 மில்லியன் தொகையான மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி, முதலாவது கட்டத்தின் முன்னேற்றம் இரண்டாவது கட்டத்திற்கு நிதிகளை விடுவிப்பதற்கு முன்னர் மீளாய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இது தொடர்பில் மேலும் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வலய கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஊடாக முதலாவது கட்டத்தின் கீழான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2013 இல் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ் 132 தேசிய பாடசாலைகளுக்கும் 466 இரண்டாம் நிலை மாகாண பாடசாலைகளுக்கும் ரூபா 89.5 மில்லியன் தொகையான நிதிகள் விடுவிக்கப்பட்டிருந்தன.

(ii) சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி, கல்வி அமைச்சானது இரண்டாம் நிலைப் பாடசாலைகளிற்காக பாடசாலை அடிப்படை கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் அமுலாக்கலில் செயற்திட்ட உத்தேசங்களை பெறுவதற்கு வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய பிரேரணைகள் வலையக் கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 இல் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் அமுலாக்கலிற்காக ரூபா 15.70 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 16.41 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது.

(உ) கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவிற்காக ஒரு தொழில்நுட்ப உதவியாளரின் (ரீஏ) சேவை மீளாய்வாண்டின் மூன்று மாத காலத்திற்காக ரூபா 180,000 கிரயத்தில் பெறப்பட்டிருந்தது. குழுக் குறிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு தொழில்நுட்ப உதவியாளரால் பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அத்தகைய பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.